**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-060420224832

Volume: 6

Issue: 4

Month: April

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 20.01.2022

Accepted: 15.03.2022

Published: 01.04.2022

Citation:
Jayakrishnan, P. "Naturopathy in Tolkappiam." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 4, 2022, pp. 114–20.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i4.4832

*Corresponding Author:
jeyakrishnanku@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Naturopathy in Tolkappiam

**P. Jayakrishnan**
*Professor and Head of Department, Tamil Department*
*University of Kerala, Kariyavattam, Thiruvananthapuram, Kerala, India*
*http://orcid.org/0000-0001-7254-5358*

**Abstract -** Tolkappim is a grammar book on the Tamil language, but it is also a grammar book that explains the concepts of science, philosophy, medicine, astronomy, astrology, mathematics, etc. This article or section needs sources or references that appear in credible, third-party publications. Tolkappiyar has published many medical ideas that were not published by the western medical scholars who lived in the world two thousand years ago. This article or section needs sources or references that appear in credible, third-party publications.

**Key Words:** Tolkappiyam, Grammar Books, Naturopathy, Symptoms, Medical Methods

**References**

1. Tolkappiyam, Saivasittantha Nurupathippukkalam, Chennai, 1963.
2. Venugopalappillai, M.V., Siddhar Gnanakovai, 1956.
3. Vasudevan, R., Tamil Medicine, Before and After Tolkappiyam, 1987.
4. Thirumoolar, Thirumandiram Saivasittantha Nurupathippukkalam, Chennai, 1974.
5. Medical Encyclopedia, Tamil Development Corporation, First Edition, 1994, 12th Volume, 2006.
6. Medical Literatures in Tamil.

# தொல்காப்பியத்தில் இயற்கை மருத்துவம்

***முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்***
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை
கேரளப் பல்கலைக்கழகம், காரியவட்டம், திருவனந்தபுரம்

***ஆய்வுச்சுருக்கம்***
*தொல்காப்பிம் தமிழ் மொழிக்கு இலக்கணம் கூற வந்த நூலாயினும் அறிவியல், தத்துவம், மருத்துவம், வானவியல். சோதிடம், கணிதம் போன்ற துறைகளின் கருத்துக்களை விளக்கும் ஓர் இலக்கண நூலாகவும் அமைந்துள்ளது உலகில் இரண்டாயிரம் ஆண்டுகளிக்கு முன்பு வாழ்ந்த மேலை நாட்டு மருத்துவ அறிஞர்கள் வெளியிடாத பல மருத்துவச் சிந்தனைகளைத் தொல்காப்பியர் வெளியிட்டுள்ளார். ஆராய்ச்சி வசதி இல்லாத காலத்தில் தொல்காப்பியர் சுட்டியுள்ள மருத்துவக் குறிப்புக்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது*
***திறவுச் சொற்கள்:*** *தொல்காப்பியம், இலக்கண நூல்கள், இயற்கை மருத்துவம், நோயற்ற வாழ்வு, நோய் குறிப்புகள், மருத்துவ முறைகள்*

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். என்ற நோயில்லாத தன்மையையே நம் முன்னோர்கள் மிகப்பெரியத் செல்வமாகக் கருதினார்கள். அதாவது மருத்துவர் நோயாளியின் உடல்நிலையைக் கண்டறிய வேண்டும். நோயின் தன்மையை அறிந்து அதற்கேற்றார் போல் மருந்து கொடுக்க வேண்டும். மருத்துவன் நோயைப் பற்றிய நுண்ணறிவும், அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும். கொடுக்கும் மருந்து நோயைக் குணமாக்காவிட்டாலும் சரி, பாதிப்பை ஏற்படுத்திவிடக் கூடாது. நோயாளியின் பிணி அறிந்து கவனித்துகொள்ளும் உதவியாளர் இருக்க வேண்டும் என்பன போன்றனவற்றை மருத்துவச் செயல்முறைகளாக பண்டைய இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பண்டைய மருத்துவர்கள் நோய்க்கு மருந்து மட்டும் தரவில்லை. மேலாக உள, உடல்நோய்க்கு மருந்து கொடுப்பவர்களாகவே இருந்துள்ளனர் என அறியமுடிகிறது. தமிழ் மக்களின் வாழ்வியல், நாகரிக மேம்பாடு அவர்களின் மருத்துவக்கலை, மருத்துவச் சிந்தனைகள் ஆகியவற்றைத் தொல்காப்பியத்தில் உள்ள குறிப்புகள் மூலம் அறிய முடிகின்றது.

**வாயுறை வாழ்த்து**

தொல்காப்பியர் செய்யுளியலில் பெரியோர்கள் வாழ்த்தும் முறை பற்றி ஒரு நூற்பா பாடியுள்ளார். அதற்கு வாயுறை வாழ்த்து என்னு பெயர்

வாயுறை வாழ்த்து என்னும் அறிவுரை பற்றி எடுத்தியம்பும், தொல்காப்பியர் கசப்பான மூலிகைகளான வேம்பும், கடுவும் முதலில் வெறுக்கப்பட்டாலும் முடிவில் நலம் பயப்பதால் பெரிதும் விரும்பப்படும் என்பார். இதனை

**வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்**
**வேம்பும் கடுவும் போல**
**(தொல்காப்பியம், பொருள்-417)**

என்ற நூற்பாவின் மூலமாகத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். தொல்காப்பியர்காலத்தில் வேம்பும் கடுகும் மருந்தாகப் பயன்பட்டிருந்தன என்பதையும் நோயும் அதற்கான மருந்தும் வகுக்கப்பட்டிருந்தன என்பதையும் அறிய முடிகிறது.

வாய் மொழி உறை என்பது மருந்து. இதற்கு வாய்க்கண் தோன்றிய மருந்தென வேற்றுமைத்தொகையாம் எனப் பேராசிரியர்

உரை எழுதியுள்ளார். ஒருவர்மீது கடுஞ்சொல் கூறி அவர் மனதைப் புண்படுத்தாது பின்னாளில் நல்லது கிடைக்க முன்னால் கசந்து பின்னாளில் உடலுக்கு உறுதியை அளிக்கும் வேம்பும் கடுகும் போல என மேலும் உரை வழங்கியுள்ளரார். தலைமுடி நன்கு வளர்வதன் பொருட்டுக் 'கடுக்கலந்த கைபிழி' எண்ணெயைப் பயன்படுத்தினர் (தொல். சொல். சேனா. ப.19) என்றும் சில மருந்துகளின் பயன்பாடுகள் குறிப்பிடப்படுகின்றன

**அறுவை மருத்துவ முறைகள்**

தொல்காப்பியர் காலத்தில் மருத்துவர்களுக்கு உடல் கூறு மேலோட்டமாகத் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் அறுவை மருத்துவ முறைகளோடு தொடர்புடைய, அன்று வழக்கில் இருந்த சொற்களையே தம் நூலில் எடுத்தாண்டிருக்கிறார்

கண், இமை, மெய், (உடல்). மெய் என்பது இவ்வுலகம் எப்படி ஐம்பூதங்களால் ஆனது? உண்மையோ அவ்விதமே இந்த உடலும் ஐம்பூதங்களால் ஆனது உண்மை என்ற பொருளில் மெய் என்றனர். உடலை மெய் என்றதால் உடலைக் காப்பதில் அக்கால மக்கள் உறுதியாக இருந்தனர் என்பது விளங்கும். நரம்பு, சினை-உறுப்பு, உந்தி, தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ் - உதடு, நா, மூக்கு, அண்ணம், இடை அண்ணம் (Soft Palate), நுனி அண்ணம் முன்பல், நாவிளிம்பு, முதல் நா, இடைநா ((Middle of the Tongue), பல் முதல் நுனிநா, முலை, பால் வடிவு, வெரிந் - முதுகு (தொல், எழுத்து பிறப்பியல்). உடல் ஏழு தாதுக்களால் இழுத்துக் கட்டப்பட்டது. எலும்பு, கொழுப்பு, நிணம், சுக்கிலம், தசை, தண்ணீர், ரசம் என்று தாதுக்களால் இழுத்துக் கட்டப்பட்டது உடல் என்பது பொருள். இக்கருத்து தொல்காப்பியர் காலத்திலேயே ஏற்கப்பட்டது ஆகும்.

தொல்காப்பியர் காலத்தில் அறுவை மருத்துவ முறைகளும் இருந்திருக்க வேண்டும். அகத்திற்கு இலக்கணம் கண்டவர் புறத் திணையில் போர் முறைகளையும், வீரர்கள் பொருதுகளத்தில் புண்படுவது, பாசறை, வெற்றி தோல்வி முதலிய போர்ச் செய்திகளையும் குறிப்பிடுகிறார், அவ்விதம் போர்ச் செய்திகளைக் கூறுவதால் போரில் வீரர்கள் பொருதி மடிவதும், மடியாது உறுப்புகள் குறைவுறுதலும், போரில் காயம், புண் ஏற்படுவதும் இருந்திருக்க வேண்டும். அவற்றிற்கு மருத்துவம் செய்திருப்பர்.

சொல்லதிகாரத்தில் இரண்டாம் வேற்றுமை என்ன? என்பதும், அச்சொல் எங்கு வரினும், வினையும், தனக்குத் தோன்றும் நிலமாக உடைத்து' என வேற்றுமை இயலில் அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் விரித்தலின். (தொல், சொல், வேற்றுமையியல் - 72: சேனாவரையர்) என்று கூறுவார்.

இதற்கு உரையாசிரியர் சிறிதிழக்கச் சிதைத்தலாவது ஒரு பகுதியை மட்டும் நீக்குதல் என்பார். இதைப் பார்க்கும் போது அங்கத்தைக் குறைத்தல் அல்லது ஒரு பகுதியை நீக்குதல் என்பது புலனாகும்.. அதாவது ஓர் உறுப்பின் முழுமையையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ இரண்டாகக் கூறுபடுத்தல் என்பது பொருளாகும்

**வெகுளி தோன்றுதல் காரணமாக உறுப்பறை**
**(தொல் - பொருள்**
**-மெய்ப்பாட்டியல்:254)**

என்று கூறுகிறார்.

உறுப்பறை என்பதை உரையாசிரியர் அங்கங்களை அறுத்தல் என்று பொருள் கூறுகிறார். உறுப்பைக் குறைப்பது என்பது கைக் குறைத்தலோ அல்லது கண் குறைத்தலோ என்று புலவர் குழந்தை விளக்கம் கூறுகிறார். உறுப்பைக் குறைத்தல் அல்லது அறுத்து எடுத்தல் போன்ற முறைகளும்

தொகுத்தல் போன்ற முறைகளும் அன்று வழக்கில் இருந்தன என்பது விளங்கும். ஆனால் விரிவான அறுவை மருத்துவக் குறிப்புகளைக் காண முடிய வில்லை.

### கருத்தரிப்பு

பெண்ணின் கருப்பையில் கருத்தோன்றும் காலம் குறித்து இலக்கியங்களில் இடம் பெறக்கூடிய சில செய்திகள் இன்றைய அறிவியலோடு பெரிதும் பொருந்தி வருமாறு அமைந்துள்ளன. மாதவிலக்குத் தோன்றி முடிந்த பின்னர் பன்னிரெண்டு நாட்கள் பெண் வயிற்றில் கருத் தோன்றும் காலம் என்பர் (தொல். பொருள். நச். நூற்:187). மாதவிலக்குத் தோன்றிய நாளிலும், மற்றும் மாதவிலக்கு இருக்கக்கூடிய பிற நாட்களிலும் கருத்தங்கினால் அது வயிற்றிலேயே அழிந்துவிடும் எனவும், மூன்றாம் நாள் கருத்தங்க நேர்ந்தால் அக்கரு சிலகாலம் உயிருடன் இருந்து பின்னர் அழியும் என்றும், கணவனும் மனைவியும் உறவுகொள்ளும் காலத்து வருத்தம் இன்றி மனமகிழ்ச்சியுடன் இருப்பின் கரு மாட்சிமைப் படுமென்றும் கருதியுள்ளனர் (தொல். பொருள். நச். ப.271). பெண்ணின் வயிற்றில் கருத்தோன்றி வளரும் காலத்து அவளது உடலின் உள்ளும் புறமும் ஏற்படும் மாற்றங்களையும் தொல்காப்பியம் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

### ஐந்திரம்

தொல்காப்பிய பாயிரத்தில் முன்னெடுக்கப்படுகிற ஒரு சொல் ஐந்திரம் என்னும் அழகிய தமிழ்ச் சொல். நிலம், நீர், தீ, காற்று, விசும்பு எனும் பஞ்சபூத ஆற்றலைத் தமிழர் ஐந்திரம் என்றனர். திரம் என்பது குவிக்கப்பட்ட ஆற்றல். திரள், திரட்சி, திரண்ட என்பதற்கு குவிதல், உருண்டையாதல் என்று பொருள். நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்னும் ஐந்திரங்கள் திறனை வெளிப்படுத்தவல்ல குவிக்கப்பட்ட ஆற்றல் வடிவங்கள். திறன் என்பது வெளிப்படும் ஆற்றல். திற, திறத்தல் செய், என்ற சொற்கள் அதை விளக்கும் இந்த ஐந்திரங்களையொட்டி பழந்தமிழர் முன்னேற்றக் கலைகளை முன்னெடுத்திருக்கின்றனர். அவை நிமித்தகம் அல்லது நாடி பார்த்தல், கணியம், மந்திரம், எந்திரம், தந்திரம் என்பன. நடப்பில் உள்ள தலைப்பில் சொல்ல வேண்டுமானல் சோதிடம், எண்ணியல், வழிபாடு, தனிப்புலமைக் கருவிகள் என்று சொல்லலாம்.

தொல்காப்பியம் நெடுகலும் 'என்மனார் புலவர்' 'நுண்ணிதின் உணர்ந்தோர்' 'மொழிப' 'என்றிசினோரே' 'நுனித்தகு புலவர் கூறிய நூலே' என்று முடித்திருப்பதால், தொல்காப்பியம் கூறும் இலக்கணச் செய்திகளெல்லாம் முந்து நூல்களில் கண்டவையே என்பது தெளிவு. தமிழ் மருத்துவர் மருந்து, வாதம், ஓகம், ஞானம் ஆகிய நான்கு உறுதிப் பொருள்களைக் குறியீடுகளாகக் குறித்தனர். அக்குறியீடுகள் தொல்காப்பியத்தில் அமைப்பு எண்களாக அமைந்துள்ளன.

### பழந்தமிழ் மருத்துவ அறிஞர்கள்

தொல்காப்பியம் தாபத முனிவர், நோய்மருங்கு அறிநர் ஆகியோரைக் குறிப்பிடுகிறது. "வீடுபேறு அடைய முயல்வார்க்குரிய மார்க்கங்கள் எண் வகைப்படும். அவை ஓகம் இயமம், நியமம், ஆசனம், வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என்பனவாகும்.

**'நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்"**

– (தொல்.புறத்.1021.)

என்று, ஓக முனிவர் வழக்கங்களைக் குறிப்பிடுகிறது.

### வளியிசை

ஓக முறையினை மேற்கொள்ளும் முனிவர்கள் உணரக்கூடிய ஒலி அதிர்வுகளை 'வளியிசை' (தொல். எழுத். பிறப்பியல். 20) என்று கூறுவர். இந் நுண்ணதிர்வுகள் ஓகம் புரிகின்றவர்களால் மட்டுமே உணர முடியும் என்பதால், தொல்காப்பிய ஆசிரியர் ஓகம் புரிந்தவராகக்கருதக்கூடியவராகிறார்.

ஐம்பூதக் கோட்பாடு இயற்கையின் இயற்கையாகிய தமிழ் மருத்துவத்தின் ஐம்பூதக்கோட்டினை

**"நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"**
**- தொல்.மரபியல். 1589.**

என்று கூறுகிறது.

### ஐந்து திணையும் ஆறு பொழுதும்

தொல்காப்பியம் கூறும் பெரும்பொழுதும் சிறுபொழுதும் ஐந்திணைக் கோட்பாடும், தமிழ் மருத்துவத்தில் சிறப்பாகக் கூறப்படுகின்றன. நோய்களைக் கணிப்பதற்குச் சிறுபொழுதுகளும், மருந்துகளைச் செய்வதற்கும் நோய் பரவுதலை அறிவதற்கும் பெரும்பொழுதுகளும், நோயாளர் வாழும் பகுதியைக்கொண்டு நோயை அறிவதற்கு இருபொழுதுகளும் தமிழ் மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளன.

### காலக்கணியர்கள்

மூவகைக் காலத்தையும் ஆய்ந்து கூறும் காலக் கணிதர்கள், தொல்காப்பியக் காலத்திற்கும் முன் இருந்தார்கள் என்பதை,

**"மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
**நெறியின் ஆற்றிய அறிவன்"**
**- தொல்.புறத்.20**

என்று, கூறுகிறது.

காலத்தை அறிந்த பின்பே மருத்துவம் பார்க்க வேண்டுமென்று தமிழ் மருத்துவம் விதி வகுத்துள்ளது.

**"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்**
**துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை".**
**களவியல் . 45.**

என்னும் களவியல் இந்நூற்பா, காதலன் காதலியைச் சந்திக்கும்போது நாளும் கிழமையும் பார்த்துக் கொண்டிருப்பதில்லை என்று வானியல் செய்தியைக் குறிப்பிடுகிறது.

**"நாள்முன் வரூஉம் வல்முதற் றொழிற்கே**
**- புணரியல்.141**

இச்சூத்திரம் குறிக்கும் நாள், விண்மீனைக் குறிப்பதாகும். இலக்கணத்தில் குறிப்பிடும் அளவுக்கு வானியல் அறிவு வழக்கிலிருந்தது என்றுணரலாம். கலியாண்டை உருவாக்கிய வானியல் கணியர்கள் பழந்தமிழ் மருத்துவ அறிஞர்களாவர். கலியாண்டு கி.மு.3102 இல் தொடங்குகிறது என்பதால், தொல்காப்பியத்திற்கு முன் வானியலார்கள் இருந்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது.

### நோய்க் குறிப்புகள்

நோயின் குணத்தைக் கண்களால் காண முடியாது. கருத்தினால் மட்டுமே அறிய முடியும் என்னும் செய்தியைப் பதிவு செய்கிறது தொல்காப்பியம். (பொருளியல். 53.)

**'வாயுறை' வாழ்த்தும் செவியறி வுறூஉம்**
**ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்**
**- (தொல்.பொருள்.புறத்.35.)**

வாயுறை என்பது வாய் வழியே அருந்துகின்ற மருந்து என்று பொருள் தரும். உறை என்பது மருந்தைக் குறிக்கும். ஒப்புறை - ஒத்த குண மருந்து; எதிருறை - எதிர் குண மருந்து; கலப்புறை - இருவகை மருந்து ஆகிய மூன்றும் தமிழ் மருத்துவத்தில் மருத்துவ முறைகளாகும்.

**"அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி"**
**(தொல்.சொல். உயிரி. 794.)**
**"பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்"**
**(தொல்.பொருள்.புறத்.77.)**

'தெருமரல்' என்பது உள்ளத்தின் சுழற்சியை, மன இறுக்கத்தைக் குறிக்கும். 'பேய் ஓம்பிய' என்பது மன நோயின் குறிப்பு. மன நோய், தமிழ் மருத்துவத்தில் சிறப்பு மருத்துவமாகும்.

**'பையுள் சிறுமையும் நோயின் பொருள்'**
**- தொல்.சொல்.உயிரி. 824.**

பையுள் என்பது வலியைத் தருகின்ற நோயைக் குறிக்கும் சொல்லாகும்.

**'வயா என்கிளவி வேட்கைப் பெருக்கம்'**
**- தொல்.சொல்.உயிரி. 854.**

வயா என்பது கருவுற்றிருக்கும் வேளையில் வரும் நோயைக் குறிக்கிறது. இந்நோய் விலங்கு, தாவரம், பெண் ஆகியோருக்கு ஏற்படும் நோயாகும்.

**'மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு**
**யாப்புற வந்த இளிவரல் நான்கே"**
**- தொல்.மெய்ப். 6.**

இளிவரல் நான்கும் நோயின் குறிப்பாகும்.

### பெருந்திணை மெய்ப்பாடுகள்

பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள் இருபதும் நோயுற்றவர் நிலையைக் குறிப்பால் உணர்த்துகின்றன.[18]

இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல், எதிர்பெய்து பரிதல், ஏதம் ஆய்தல், பசியட நிற்றல், பசலை பாய்தல், உண்டியிற் குறைதல், உடம்பு நனிசுருங்கல், கண்துயில் மறுத்தல், கனவொடு மயங்கல், பொய்யாக் கோடல், மெய்யே என்றல், ஐயம் செய்தல், அவன்தமர் உவத்தல், அறன் அழித்துரைத்தல், ஆங்கு நெஞ்சழிதல், எம்மொழியாயினும் ஒப்புமை கோடல், ஒப்புவழி உவத்தல், உறுபெயர் கேட்டல், நலத்தகநாடின்கலக்கமும்அதுவேஎன்பவை நோயுற்றவர் படுக்கையில் கிடக்கையாகக் கிடக்கும்போது நோயாளரின் செயல் எவ்வாறிக்கும் என்பதைப் பெருந்திணை மெய்ப்பாடாகக் கூறக் காணலாம்.

### வீட்டு விலக்கம்

வீட்டு விலக்கம் என்னும் மூன்று நாளில் ஆண் பெண் இருவரும் கூடி கருவமைந்தால் அந்தக் கரு கூன், குருடு, செவிடு, பேடு போன்றவற்றில் ஒன்றாகப் பிறக்கும் என்பதால்,

**'பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்**
**நீத்தகன் றுரையார் என்மனார் புலவர்"**
**- தொல்.பொருள்.1133 (46)**

விலக்குடைய மூன்று நாளும் விலகி இரு என்பதும் மருத்துவச் செய்தியே ஆகும்.

போருக்குப் போகும் வேந்தர்கள் பூச்சூடிச் செல்வார்களாம். (தொல்.புறம்.5) சேரர் பனம்பூவும் சோழர் ஆத்திப்பூவும் பாண்டியர் வேப்பம்பூவும் போர் மறவர்கள் வெட்சி, வஞ்சி, தும்பை, வாகை, காஞ்சி ஆகிய பூக்களைச் சூடிச் சென்றனர்.

வேந்தர்களும் மறவர்களும் சூடிச் செல்லும் பூக்கள் போர்க்களத்தில் (முதலுதவிப் பெட்டியைப் போல) அவசர சிகிச்சைக்காகப் பயன்படுத்தப் படுபவையாகும்.

### முடிவுரை

மனித சமூகத்தில் ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து, நோய்களைத் தீர்ப்பதற்கான மருத்துவமுறைகளைப் பார்க்கும்பொழுது நோயும் மருத்துவமும் மனித இனப் பண்பாட்டு வரலாற்றில் பிரிக்க முடியாது.

பண்டைய மருத்துவர்கள் நோய்க்கு மருந்து மட்டும் தரவில்லை. மேலாக உள, உடல்நோய்க்கு மருந்து கொடுப்பவர்களாகவே இருந்துள்ளனர் என அறியமுடிகிறது.

தொல்காப்பியர் கசப்பான மூலிகைகளான வேம்பும், கடுவும் முதலில் வெறுக்கப்பட்டாலும் முடிவில் நலம் பயப்பதால் பெரிதும் விரும்பப்படும் என்பர்.

மருத்துவம் என்பது மக்கள் வாழ்வோடும், வளத்தோடும் இணைத்துக் காணப்பட்டதால் அத்தொழில் செய்யும் மருத்துவர்களைப்

பண்டைக்காலந்தொட்டு இன்றுவரைக்கும் சமுதாயம் மதிப்புடனே ஏற்றுக்கொண்டது. இச்சான்றோர்களை அறவோன் என்றும், வைத்தியன் என்றும், மருத்துவன் என்றும் குறிப்பிடுகின்றனர்.

## நூற்பட்டியல்

1. தொல்காப்பியம். *1963.* சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. சித்தர் ஞானக்கோவை. *1956.* மே.வி வேணுகோபாலப்பிள்ளை.
3. தமிழ் மருத்துவம். *1987.* தொல்காப்பியத்திற்கு முன் தொல்காப்பியத்திற்கு பின், இரா வாசுதேவன்.
4. திருமூலர். *1974.* திருமந்திரம் சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் சென்னை.
5. மருத்துவக் கலைக்களஞ்சியம் தமிழ் வளர்ச்சிக் கழகம் முதல் தொகுதி *1994* *12* ஆவது தொகுதி*2006* வரை.
6. தமிழில் மருத்துவ இலக்கியங்கள்.